# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## ஆறாம் தவணைப்பரீட்சை 2024

| தரம் : 13 | தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I<br>Communication and Media Studies I | நேரம் :<br>2 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண்:.............................. | 29 T I | |

**கவனிக்க:**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய கட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (✖) இடுக.

01. தொடர்பாடல் என்பது எப்போதும் மாறாமல் காணப்படும் ஒன்றல்ல என்னும் கருத்தியலை விபரிக்கப் **பொருத்தமானது**
   1) தொடர்பாடல் குறிக்கோளைக் கொண்டது.
   2) தொடர்பாடல் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு இயைபானது
   3) தொடர்பாடல் ஓர் சக்தி
   4) தொடர்பாடல் என்பது தகவல் பரிமாற்றம்
   5) தொடர்பாடல் ஓர் செயன்முறையாகும்

02.கருத்து, ஆற்றல் என்பவற்றைப் பேச்சு அல்லது எழுத்தின் மூலம் பரிமாறுவது தொடர்பாடலாகும் என்னும் வரையறையை முன்வைத்தவர் /முன்வைத்தவை
   1) ஷனன் மற்றும் வீவர்   2) ஒக்ஸ்போட் அகராதி   3) சார்ள்ஸ்.H.கூலி
   4) சுமங்கல அகராதி   5) வில்பர் ஷ்ராம்

03. அரசியல் திருத்தச் சட்டத்தில் தகவல் அறியும் உரிமை பற்றிய ஏற்பாட்டினை வெளிப்படுத்துவது
   1) 13வது திருத்தச் சட்டமூலம்   2) 20வது திருத்தச் சட்டமூலம்
   3) 18வது திருத்தச் சட்டமூலம்   4) 19வது திருத்தச் சட்டமூலம்
   5) 21 வது திருத்தச் சட்டமூலம்.

04. வாய்மொழியற்ற தொடர்பாடலினை வினைத்திறனாகப் பயன்படுத்த உடல்மொழியினைப் பயன்படுத்த முடியும். இவ் உடல்மொழியில் **உள்ளடங்காத கூறு**
   1) நடன அசைவுகள்   2) கண்ணசைவு   3) கைகொடுத்தல்
   4) முக அசைவு   5) கைகளால் சைகை காண்பித்தல்

05. பொதுசனத் தொடர்பு அதிகாரியினுடைய செயற்பாடுகளை நிறுவனம் ஒன்றில் மேற்கொள்ளக் கூடிய ஆற்றலுடையவர்
   1) ஊடக அதிகாரி   2) நிறுவனப் பணிப்பாளர்
   3) நிறுவன முகாமையாளர்   4) நிறுவன உரிமையாளர்
   5) நிறுவன சந்தைப்படுத்தல் அதிகாரி

06. தொடர்பாடலின் தொழினுட்பச் செயற்பாடுகள் பற்றி அதிக கரிசனை கொள்ளும் மாதிரி

1) ஹரோல்.டீ.லாஸ்வெல் மாதிரி
2) ஒஸ்குட் வில்பர் ஷ்ராம் மாதிரி
3) டேவிட் பெர்லோ மாதிரி
4) ஷெனன் மற்றும் வீவர் மாதிரி
5) அரிஸ்டோட்டில் மாதிரி

07. மானுட நடத்தைக் கோலங்களில் வழக்காறுகள், நம்பிக்கைகள், சடங்குகளை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் செயற்பாட்டோடு தொடர்புபடுவது

1) உணர்வுகளை வெளிப்படுத்துதல்
2) பண்பாட்டு ஆக்கிரமிப்பினை ஏற்படுத்துதல்
3) பண்பாட்டு ஆர்முடுகலினை ஏற்படுத்துதல்
4) சமூகத்தின் எதிர்மறையான போக்குகளை வெளிப்படுத்துதல்.
5) பண்பாட்டுப் பரிமாற்றத்தினை ஏற்படுத்துதல்.

08. செய்தி நிறுவனம் ஒன்றில் முன்வைக்கப்படுகின்ற செய்திகளில் அதிக கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கக் கூடிய குழு / நபர்

1) செய்தியாளர்கள்
2) புகைப்படவியலாளர்கள்
3) ஆசிரியபீடம்
4) பக்க வடிவமைப்பாளர்
5) வாயிற்காப்பாளர்கள்

09. ஊடக நிறுவனத்தின் கொள்கையை வெளிப்படுத்துவதும் பத்திரிகையொன்றில் தினமும் வெளி வருவதுமான பத்திரிகையின் அங்கமாக அமைவது எது?

1) செய்தி
2) சித்திரிப்புக் கட்டுரைகள்
3) விளம்பர எழுத்துரு
4) பத்தி எழுத்துக்கள்
5) ஆசிரியர் தலையங்கம்

10. ஊடகத்தினால் முன்வைக்கப்படும் தகவல்களை நுகரவும் பகுப்பாய்வு செய்யவும், மதிப்பிடவும் கொண்டுள்ள ஆற்றல் ஊடக விளங்கறிவு என வரையறை செய்வது

1) ஐரோப்பிய ஒன்றியம்
2) தேசிய ஊடக விளங்கறிவிற்கான மத்திய நிலையம்
3) யுனெஸ்கோ
4) இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
5) உமேயாப் பல்கலைக்கழகம்

11. வர்த்தக சமூகத்தினருக்கு விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள சமூக ஊடகங்களில் முதன்மையானது

1) பின்ரஸ்ட்
2) இன்ஸ்ராகிராம்
3) லிங்டின்
4) சினாப்சற் (Snapchat)
5) கூகிள் பிளஸ் (Google +)

12. ஒரு நாட்டில் அபிவிருத்தியினைப் பாதிக்கும் அரசியல் மற்றும் பண்பாட்டுப் பிரச்சினையாகக் கருதப்படுவது

1) ஊடகங்களின் வணிகமயமற்ற தன்மை
2) மதத்தினை மையப்படுத்தி இன்மையினால் ஆகும்.
3) தேசிய சிந்தனை மற்றும் கொள்கை இல்லமல் இருத்தலாகும்.
4) பாரம்பரியத்திலிருந்து விலகியிருத்தலாகும்.
5) மாற்றத்தைப் பற்றிய சந்தேகங்கள் இல்லாமல் இருத்தலாகும்.

13. ஆய்வுச் செயன்முறை ஒன்றின் பிரதான படிமுறைகளில் **உள்ளடங்காதது**

1) பிரச்சினையை இனங்காணல்
2) ஆய்வின் முடிவுகளை முன்கூட்டியே தீர்மானித்தல்
3) தரவு சேகரித்தல்
4) அறிக்கை எழுதுதல்
5) தரவுப் பகுப்பாய்வு

14. இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக அரசினால் முன்வைக்கப்படும் வேலைத் திட்டங்களில் **உள்ளடங்காதது**

1) சமுர்த்தி உதவித்திட்டம் வழங்குதல்
2) சுய தொழில் ஊக்குவிப்பு
3) வரி அறவிடுதலை அதிகரித்தல்
4) நிலையான ஜீவனோபாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
5) இலவசக் கல்வி வேலைத்திட்டம்

15. படைப்பாக்கச் செயற்பாடொன்றில் முக்கிய இயல்பாகக் கருதப்படக்கூடியது

1) தொடர் பயிற்சி
2) புத்தாக்கம் மற்றும் சுயம்
3) பன்முகத் தன்மை
4) பல்வகைத் தன்மை
5) முன்வைப்புத் திறன்

16. ஸ்ரீனிவாஸ் R.மெல்கோட்டே என்பவரால் முன்வைக்கப்பட்ட அபிவிருத்தித் தொடர்பாடல் பற்றிய கருத்துக்களின் **உள்ளடங்காதது**

1) விமர்சன ரீதியான கருத்துக்கள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்
2) மனிதனது வரலாறு ஓர் செயன்முறை என்பதனை இனங்காணுதல்
3) மூன்றாம் உலகநாடுகள் மதம்சார் பிணைப்புக்களிலிருந்து விடுபடல்
4) மேல் - கீழ் தரப்புக்களை ஒன்றிணைத்தல்
5) தொடர்பாடல் மற்றும் சமூகக் கட்டமைப்பினை வலுப்படுத்தல்.

17. பொதுமக்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டின் விளைவாகவும் பாரம்பரிய பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையதுமான பண்பாட்டினைக் குறிப்பது

1) வெகுசனப் பண்பாடு
2) செவ்வியல் பண்பாடு
3) பிரசித்த பண்பாடு
4) பூகோளப் பண்பாடு
5) ஊடகப் பண்பாடு

18. சகல நாடுகளிலும் தேசிய உணர்வுக்கு மேலதிகமாக சர்வதேசத் தொடர்புகளை உறுதிப்படுத்தும் வகையில் தொடர்பாடல் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது

1) 1927 பிரித்தானிய அனுமதி
2) 1934 தொடர்பாடல் தொழிநுட்ப சட்டமூலம் அமெரிக்கா
3) 1970 சீன் மக்பிறைட் அறிக்கை
4) 1976 கோஸ்தாரிகா மாநாடு
5) 1969 ஹேபட் ஷெல்பர் அறிக்கை

19. தொடர்பாடல் செயன்முறை ஒன்றின் காண்பியலாக்க தன்மையை நேரடியாக வெளிப்படுத்த **முடியாத** பிரதான வெகுசன ஊடகப் புலம்

1) பத்திரிகை
2) சினிமா
3) தொலைக்காட்சி
4) சமூக ஊடகங்கள்
5) வானொலி

20. பொதுமக்கள் தொடர்புச் செயற்பாடொன்றில் விழுமியக் கற்கைகளின் முக்கியத்துவம் தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடுவது

1) எட்வேட்.பெர்ணீஸ் - பொதுமக்கள் தொடர்பு
2) யூலியர் சீஸர் - பொதுமக்களின் கடமைப் பொறுப்புக்கள்
3) ஜேம்ஸ் குரூனிக் - பொதுசனத் தொடர்பும் வரலாறும்
4) ரொட் ஹான்ட் - பொதுசனத் தொடர்பு
5) எல்மா டேவிஸ் - பொதுசனத் தொடர்பும் செய்திப்பரிமாற்றமும்

21.சிறுவர்களை மையமாகக் கொண்ட கார்ட்டூன் நிகழ்ச்சிகள் தற்போது தொலைக்காட்சிகளில் அதிகமாக அறிமுகம் செய்யப்படுவதாக ஆசிரியர் வலியுறுத்தினார். இந்த முன்மொழிவுடன் தொடர்புடைய ஊடகப் போக்கு

1) ஊடகக் குவிவு. 2) சிறுகூறாக்குதல் 3) கட்டுப்பாட்டுத் தளர்வு

4) புத்தாக்கப் பரவலாக்கம் 5) சிறுவர்களை மையப்படுத்தல்

22. இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது எவ்வாறு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பது பற்றி ஊடகங்கள் விளக்கமளித்தன. இச்செயற்பாட்டோடு தொடர்புபடுவது

1) திசைதிரும்பலாகும் 2) அறிகையாகும் 3) மீளப்பெறலாகும்

4) ஊடக விஸ்தீரணமாகும் 5) சமூக உபயோகத்தன்மையாகும்.

23. A - எல்லைகளற்ற பொதுமக்கள் திரையிடலுக்கு உகந்தது

B - வயது வந்தோருக்கு மட்டும் உரித்தானது

C - வயது வந்தோர் மற்றும் சிறுவர்களுக்கானது.

திரைப்படத் தணிக்கைகளின் மேற்குறித்த கூற்றுக்களின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படுமாயின் அவை குறித்து நிற்பவை **முறையே**

1) A, X, U 2) U, A, X 3) U, X, A 4) X, A, U 5) X, U, A

24. படைப்பாக்கத் தொடர்பாடலுக்கு உரித்தான செயற்பாடு **அல்லாதது**

1) தரவுப் பகுப்பாய்வு 2) மகிழ்ச்சியைத் தருதல்

3) சமூகமயமாக்கத்தை ஊக்குவித்தல். 4) அறிவுசார் ஞானத்தினை உருவாக்குதல்

5) கருத்தியல்களைப் பரிமாற்றிக் கொள்ளுதல்

25. விமர்சன ரீதியான பெறுநரிடம் காணப்பட வேண்டிய பண்புகளில் ஒன்று

1) அர்த்தம் 2) பொருத்தப்பாடு 3) தூண்டல் 4) நம்பகத்தன்மை 5) பகுப்பாய்வு

26. ஊடக விளங்கறிவினை விருத்தி செய்வதில் அறிவுக் கட்டமைப்பு செல்வாக்குச் செலுத்தும். இங்கு அறிவுக் கட்டமைப்பு என்பது

1) அனுபவங்கள் வாயிலான நடத்தை மாற்றம்

2) உணர்வுடனும் உணர்வின்றியும் பெறப்படும் தகவல் பொதியாகும்.

3) ஒருவரிடம் காணப்படும் சாதாரண தகவல்களை மட்டும் கொண்ட தொகுதி

4) ஒருவரிடம் காணப்படும் அறிவு, ஆற்றல், அனுபவங்களின் தொகுதி

5) அழகியல் உணர்வு மூலம் தகவலை முன்வைக்குத் திறன்

27. நேரடியாக ஊடக நிறுவனங்களோடு தொடர்புபடாதுவிட்டாலும் ஊடக நடவடிக்கைகளோடு தொடர்பு பட்டு அவற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடாக **அமைவது**

1) வடிகட்டி 2) ஊடக விஸ்தீரணம் 3) ஒழுங்காக்கிகள்

4) தொடர்பாடுநர் 5) வாயிற்காப்பாளர்

28. வெகுசன ஊடகப் பெறுநர்கள் தொடர்பில் **உண்மையான** கூற்று

1) செயற்கைத் தன்மையான வகிபங்கு காணப்படும்.

2) இலகுவாக பின்னூட்டலினை முன்வைக்கக்கூடியவர்களாக காணப்படுவார்.

3) ஒரே தன்மை வாய்ந்த குழுவினராகக் காணப்படுதல்

4) பெறுநர்களது மகிழ்ச்சிக்களம் பரந்ததாகக் காணப்படாது

5) பெறுநர்களது விளங்கறிவு சமநிலையில் காணப்படாது.

29. இலங்கையில் ஆரம்பகாலம் தொட்டு அரசியல் கட்சிகளின் பிரச்சாரத்திற்கு இசைவாக்கப்பட்டு வாக்களித்து வந்த மக்கள் அண்மையில் வெகுசன ஊடகங்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துருவாக்கங்களினை அவதானித்து வாக்களித்திருந்தனர். **இது தொடர்புபடுவது**

1) ஊடக விளங்கறிவுடன் தொடர்புடையது.
2) ஊடக விஸ்தீரணத்துடன் தொடர்புடையது.
3) அரச பொதுமக்கள் தொடர்புடன் தொடர்புடையது.
4) ஊடக பண்பாட்டுடன் தொடர்புடையது.
5) ஊடக – பொதுமக்கள் தொடர்புடைய தொடர்புடையது.

30. ஆய்வுச் செயற்பாடொன்றில் ஒழுக்க நெறியாக **கருதப்படக்கூடியது**

1) தவறான தரவுகளை உள்ளடக்காமை
2) தரவுகளைத் திட்டமிட்ட வகையில் திரிபு செய்கின்றமை
3) சரியான ஆய்வு விதிமுறைகளைப் பின்பற்றாமை
4) ஆய்வின் பண்பு மற்றும் தரத்தினைப் பாதுகாக்காமை
5) தரவு வழங்கியமைக்கான தரவு வழங்குநரை பாராட்டாமை.

31. ஊடக உள்ளடக்கங்களில், அரசியல் பொருளாதாரத்தில் அதிகரித்த செல்வாக்கும். வர்த்தக விளம்பரங்களின் அதிகரித்த தன்மையும் கொண்டிருக்குமாயின் அதனுடன் தொடர்புபடும் ஊடக வெளிப்பாடு

1) ஊடகப் பொருளாதாரம்
2) ஊடக பண்பாடு
3) ஊடகத் தோற்ற மயக்கம்
4) ஊடக திறனாய்வு
5) ஊடகத் தகவலின் ஆதிக்கம்

32. பரீட்சை முடிவுகளை அறியக்கிடைத்த விஜியின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் திரண்டது. சினிமாவின் இவ்வாறான காட்சியமைப்பினைப் பதிவு செய்ய மிகப் பொருத்தமான கமரா எடுப்பு

1) நீள் எடுப்பு
2) மிகு அண்மைநிலை எடுப்பு
3) இடைநிலை எடுப்பு
4) இடைநிலை அண்மை எடுப்பு
5) மேற்கூறிய அனைத்தும்

33. பிருந்தா தனது வங்கிக் கணக்கிற்கு குறிப்பிட்ட தொகையை வைப்பிட்டார். இது தொடர்பான தகவல் குறுஞ்செய்தியாக அவரது கைத்தொலைபேசிக்கு வந்தது. இச் செயற்பாட்டுடன் தொடர்புடைய புதிய ஊடகப் பண்புகளில் ஒன்று

1) வலையமைப்பாதல்
2) எண்ணிமைப்படுத்தல்
3) தானியங்கி
4) அதிவேக செய்தியனுப்புகை
5) தரவுத்தளம்

**பின்வரும் தொடர்பாடலின் அடிப்படைக் கூறுகளினை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் 34 தொடக்கம் 38 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக**

| | | |
|---|---|---|
| A. – தகவல்/செய்தி | E. - இரைச்சல் | I. – பின்னூட்டம் |
| B. – தொடர்பாடுநர் | F. – தாக்கம் | J. – குறிமுறையாக்கம் |
| C. – பெறுநர் | G. – பொருட்கோடல் | K. – குறிமுறையவிழ்ப்பு |
| D. – வழிமுறை | H. – சந்தர்ப்பம் | L. – தகவல் மூலம் |

34. மேற்குறிப்பிட்ட அடிப்படைகளில் வட்டச்சுற்றுப் பாய்ச்சல் வரிப்படத்துடன் தொடர்புடையதை பிரதிபலிக்கும் தொகுதி

1) A B C D
2) J A G K
3) A J B I
4) J A B I
5) K A J F

35. மேற்குறிப்பிட்ட தொடர்பாடல் கட்டமைப்பு கூறுகளில் தொழில்நுட்பச் செயன்முறையை வெளிப்படுத்துவதுடன் தொடர்புபடாத தொகுதியைப் புலப்படுத்துவது

1) A, E, L 2) A, B, L 3) J, K, I 4) A, J, L 5) J, B, E

36. நேர்வழித் தொடர்பாடல் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு முன்வைப்பதும் வலியுறுத்தலைப் பிரதானமாகக் கொண்டு முன்வைக்கப்பட்ட மாதிரியுடன் தொடர்புபடுவது

1) A,. B, C, D, F 2) A, B, J, E, L 3) J, K, B, C, D

4) J, G, H, K, L 5) J, B, C, D, H

37. தொடர்பாடல் செயன்முறையில் தொடர்பாடலானது தொடர்ச்சித் தன்மையானதாக நடைபெறுவதற்கு அவசியம் காணப்பட வேண்டிய கூறுகளாவன

1) A மற்றும் B மாத்திரம் 2) J மற்றும் K மாத்திரம் 3) B மற்றும் D மாத்திரம்

4) A மற்றும் G மாத்திரம் 5) G மற்றும் L மாத்திரம்

38. மேற்குறிப்பிட்ட அடிப்படைக் கூறுகளில் நேர்கோட்டு மாதிரியிலும் நேர்கோடலல்லாத மாதிரியிலும் பொருந்தக் கூடியதாகக் காணப்படும் அம்சங்களினைக் குறிப்பது.

1) A, B மற்றும் L உடன் தொடர்புபடுவது 2) B, C மற்றும் F உடன் தொடர்புபடுவது

3) C, D மற்றும் H உடன் தொடர்புபடுவது 4) K, L மற்றும் F உடன் தொடர்புபடுவது

5) J, K மற்றும் B உடன் தொடர்புபடுவது

39. ஊடகம் தொடர்பான அரச உரிமையாண்மை மற்றும் ஊடக சட்டங்களினை இழிவளவாக்குவதன் மூலம் ஊடகச் செயற்பாடுகளினைச் சுதந்திரமானதாக்கலாம். இதனுடன் தொடர்புபடுவது

1) கட்டுப்பாட்டுத்தளர்வு 2) வணிகமயப்படுத்தல் 3) ஊடகக்குவிகை

4) ஊடகப்பொருளாதாரம் 5) பூகோளமயமாக்கல்

40. பாடசாலை ஊடகக் கழகம் ஒன்றினால் மாணவர்களின் திறன்விருத்திக்காக திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இதனைப்பொது மக்கள் திரையிடலுக்கு முன் அனுமதி பெறுதல் கட்டாயமானதாகும். இதனுடன் தொடர்புபட்ட நிறுவனம்

1) திரைப்படக் கூட்டுத்தாபனம் 2) அரசாங்க திரைப்படப் பிரிவு

3) வெகுசன ஊடக அமைச்சு 4) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை

5) பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு

41. E.B ரெய்லரின் கருத்துப்படி பண்பாடு என்பதில் உள்ளடக்கப்படக்கூடிய கூறுகள்

1) ஒருவரின் பழக்க வழக்கங்கள் 2) குறிப்பிட்ட சமூகமொன்றின் கலைகள், விழுமியங்கள்

3) சம்பிரதாயங்கள் 4) சட்ட ஒழுங்கு விதிகள்

5) மேற்கூறிய அனைத்தும்

42. ஊடகப் பிரதிநிதிகளின் முழுமையான தலையீட்டுடன் சட்டபூர்வமாக மேற்கொள்ளப்படுவது

1) சட்டரீதியான தணிக்கை 2) கூட்டுத்தணிக்கை 3) சுயதணிக்கை

4) நிறுவனரீதியான தணிக்கை 5) குழு மற்றும் சுயதணிக்கை

43. வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென குறுக்கே வந்த இன்னொரு வாகத்தினைக் கண்ட குமார் தனது வாகனத்தினைச் சடுதியாக நிறுத்தினார். இதனுடன் தொடர்புபடும் தொடர்பாடல் வடிவம் மற்றும் வகையினைக் குறிப்பது **முறையே**

1) ஆளுள் தொடர்பாடல், சைகைத் தொடர்பாடல்

2) காட்சித் தொடர்பாடல், காண்பியத் தொடர்பாடல்

3) ஆளுள் தொடர்பாடல், காட்சித் தொடர்பாடல்

4) காட்சித் தொடர்பாடல, ஆளுள் தொடர்பாடல்

5) சைகைத் தொடர்பாடல், ஆளுள் தொடர்பாடல்

**பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 44 மறிறும் 45 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்தற்குப் பயன்படுத்துக. கீழுள்ளது கற்றலில் மாணவர்கள் எவ்வாறு ஈடுபட்டனர் என்பதற்கான ஓர் அட்டவணையாகும்.**

| | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| நேரில் | 10 | 24 | 32 | 24 | 20 |
| தொலைக்காட்சியில் | 30 | 16 | 08 | 16 | 20 |

44. குறித்த வாரத்தில் நேரிலும் தொலைக்காட்சியிலும் பங்குபற்றி கற்றலில் ஈடுபட்ட மாணவர்களின் இடைப்பெறுமதி முறையே

1) 10, 08 ஆகும். 2) 110, 90 ஆகும் 3) 24, 16 ஆகும்.

4) 32,08 ஆகும். 5) 22, 18 ஆகும்.

45. நேரிலும் தொலைக்காட்சியிலும் கற்றலில் பங்குபற்றிய மாணவர்களின் ஆகாரப் பெறுமதிகளினை எடுத்துக்காட்டும் நாட்கள் முறையே

1) திங்கள் மற்றும் வியாழன் ஆகும். 2) புதன் மற்றும் திங்கள் ஆகும்.

3) செவ்வாய் மற்றும் புதன் ஆகும் 4) செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகும்

5) புதன் மற்றும் வெள்ளி ஆகும்

46. பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி வினாவிற்கு விடை தருக.

| X | Y |
|---|---|
| 1. லிங்டின் | A - தற்காலத்தில் பரவலடைந்து வரும் சமூக ஊடகம் |
| 2. ருவிட்டர் | B - தொழில்சார் வலையமைப்புக்கு உதவுவது |
| 3. பின்ரஸ்ட் | C- உத்தியோகபூர்வ செய்திப் பிரிவுடன் தொடர்புடையது |
| 4. இன்ஸ்டகிராம் | D- பெண்களின் விருப்புக்குரிய தளம் |
| 5. டிக்டொக் | E- புகைப்படப் பகிர்விற்காகப் பயன்படுவது |

X இற்கும் Y இற்கும் இடையிலான சரியான சோடி சேர்ப்பினை எடுத்துக் காட்டும் விடை எது?

1) 1E, 2D, 3C, 4B, 5A 2) 1B, 2C, 3D, 4E, 5A 3) 1E, 2C, 3D, 4A, 5B

4) 1C, 2E, 3D, 4A, 5E 5) 1A, 2B, 3C, 4E, 5D

47. பின்வரும் கருத்தியல்கள் தொடர்பில் ஊடகக் கலந்துரையாடல் மாணவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு

சமல் : தமது வாழ்க்கையை தாமே கட்டுப்படுத்துவர்

கமல் : தமது தனிப்பட்ட தேவைகள் ஊக்கம் ஆளுமை பற்றிய விழிப்புணர்வுடன் தொழிற்படுவர்

அமல் : தமது வாழ்க்கையை பிறர் கட்டுப்படுத்துவர்

சுமல் : தாம் மற்றைய நபர்களுக்கிடையே நட்பு மற்றும் உறவுகளைப் பேணுதல் அவசியம்

மேற்குறித்த அம்சங்களில் சுயநிர்ணயம் பற்றிய கருத்துக்களை முன்வைத்தவர்

1) சமல், கமல் மற்றும் அமல் 2) சமல், கமல் மற்றும் சுமல்

3) கமல், அமல் மற்றும் சுமல் 4) சமல், கமல், அமல் மற்றும் சுமல்

5) கமல் மற்றும் சுமல் ஆகியோர் மாத்திரம்

48. நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்தமை மற்றும் அதனால் ஏற்பட்ட போட்டித் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட பொதுசனத் தொடர்பாடல் மாதிரி

1) இருவழியானசமச்சீரான மாதிரி 2) பொதுமக்கள் தொடர்பு மாதிரி

3) இருவழி சமச்சீரற்ற மாதிரி 4) பொதுமக்கள் தகவல் மாதிரி

5) செய்தி முகவர் மாதிரி

49. உலக ஊடக சுதந்திரத்தினைப் பேணுவதற்கு அடிப்படையாக அமைந்த ஏற்பாடு

1) சுவீடன் மனிதஉரிமைகள் பிரகடனம் 2) சுவீடன் தகவல்அறியும் உரிமைச் சட்டம்

3) யுனெஸ்கோ குரூன்வெல்ட் பிரகடனம் 4) ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பிரகடனம்

5) யுனெஸ்கோ மக்பிறைட் அறிக்கை

50. பின்வரும் அச்சிடல் வடிவங்களில் மிகவிரைவாகத் தகவல்களைக் கடத்துவதற்கு உதவக்கூடிய வழிமுறை

1) துண்டுப்பிரசுரம் 2) செய்திப் பத்திரிகை 3) சுவர் பதாதைகள்

4) சஞ்சிகைகள் 5) மடல்

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## Provincial Department of Education – Northern Provinc

**ஆறாம் தவணைப்பரீட்சை 2024**

| | | |
|---|---|---|
| தரம் : 13 | தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் II<br>Communication and Media Studies II | நேரம் : 3 மணித்தியாலம் |
| சுட்டெண்:.............................. | 29 T 2 | மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம் |

- ❖ ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❖ ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 40 புள்ளிகள் வழங்கப்படும்.

01. **தொடர்பாடல் வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டே நடைபெறுகின்றது.**

1) நாட்டார் ஊடகத்தில் காணக்கிடைக்கக் கூடிய பண்புகள் **இரண்டினை** விபரிக்குக. (4 புள்ளிகள்)

2) தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம் மற்றும் துறைசார் கற்கையாக அதன் வளர்ச்சி தொடர்பில் **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

3) வெகுசன ஊடகங்கள் சமூக ஊடகங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனைப் புலப்படுத்தும் **மூன்று** அம்சங்களினை **உதாரணங்களுடன்** விபரிக்குக. (12 புள்ளிகள்)

4) வெகுசனத் தொடர்பாடலின் பயன்கள் சில பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவை தொடர்பில் தகுந்த எடுத்துக்காட்டுக்களுடன் ஆராய்க.

அ) அறிகைவிருத்தி

ஆ) திசைதிருப்பல்

இ) சமூகஉபயோகத்தன்மை

ஈ) மீளப்பெறல் (16 புள்ளிகள்)

02. 1) ஆளிடைத் தொடர்பாடலின் **இரண்டு** விசேட தன்மைகளினைப் பெயரிடுக. (4 புள்ளிகள்)

2) அளிக்கைத் தொடர்பாடல் திறன்களினை விருத்தி செய்வதற்கு பங்களிக்கும் **இரண்டு** காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக. (8 புள்ளிகள்)

3) ஊடக விளங்கறிவு ஏன் தேவையானது என்பதனை **மூன்று** காரணங்களினைத் தந்து சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

4) செய்திப் பத்திரிகைகளில் படைப்பாக்க மொழியைப் பயன்படுத்துவதனைப் பின்வருவனவற்றின் பேரில் உதாரணங்களுடன் விபரிக்குக.

அ) தலையங்கங்கள்

ஆ)ஆசிரியர் தலையங்கம் (16 புள்ளிகள்)

03. 1) தொடர்பாடல் செயன்முறையில் ஊர்வம்பை வெளிப்படுத்தும் தொடர்பாடல் வடிவம் யாது? (4 புள்ளிகள்)

2) சமூக ஊடகங்கள் வாயிலாக தகவல் பரப்பப்படும் போது அவை முறைசாராத் தொடர்பாடல் இயல்பினைக் கொண்டு தொழிற்படுகின்றன. இக்கருத்துக்குச் சார்பான **இரண்டு** விடயங்களை விபரிக்குக. (08 புள்ளிகள்)

3) ஊடக விளங்கறிவு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வரைவிலக்கணப்படுத்தும் அடிப்படை அம்சங்கள் **மூன்றினை** உதாரணங்களுடன் விபரிக்குக. (12 புள்ளிகள்)

4) இலங்கையின் வெகுசன ஊடகங்களின் புதிய போக்குகள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன. அவை எவ்விதம் முன்னெடுக்கப்படுகின்றன என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

அ) தொழில்நுட்ப ரீதியிலான போக்கு

ஆ) புதிய முன்வைப்பு பாணிகள் பயன்படுத்தப்படல் (16 புள்ளிகள்)

04. "**ஊடகங்கள் மக்கள் வாழ்வியலின் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.**

1) பாரம்பரியத் தொடர்பாடலில் நாட்டார் பாடல்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை ஆகும். நாட்டார் பாடல்களின் விசேட இயல்புகள் **நான்கினைப்** பெயரிடுக. (4 புள்ளிகள்)

2) குளோட் ஷினொன் மற்றும் வொரன் வீவர் மாதிரியில் உள்ளடங்கும் கூறுகள் **இரண்டினைப்** பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக. (08 புள்ளிகள்)

3) பிரசித்தப் பண்பாட்டினது இயல்புகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விபரிக்க.( 12 புள்ளிகள்)

4) தற்கால இளைஞர்களினுடைய வாழ்வியலில் ஊடகப் பண்பாடு ஏற்படுத்தும் சாதகமான மற்றும் பாதகமான தாக்கங்கள் தொடர்பில் தலா **இரண்டு** அம்சங்களினை அடிப்படையாகக் கொண்டு திறனாய்வு செய்க. (16 புள்ளிகள்)

05. 1) இலங்கையின் ஊடக வரலாற்றில் முதன்முதலில் தோன்றிய **தமிழ், சிங்களப்** பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றைப் பட்டியற்படுத்துக. (04 புள்ளிகள்)

2) ஊடக ஒழுங்குபடுத்தலின் அவசியம் தொடர்பில் **இரண்டு** அம்சங்களினை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக. (08 புள்ளிகள்)

3) அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பின்வருவன தொடர்பில் சிறு குறிப்பு வரைக.

அ) சமூகத் தொடர்புகள் மற்றும் சமத்துவத்தை உருவாக்கல்

ஆ) கொள்கை உருவாக்கத்தில் மக்கள் பங்குபற்றல்

இ) பூகோள அபிவிருத்தி (12 புள்ளிகள்)

4) ஊடக ஒழுங்குபடுத்தல் செயன்முறையோடு தொடர்புடைய **நான்கு** நிறுவனங்களினைப் பெயரிட்டு அவற்றினது செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்க. (16 புள்ளிகள்)

06. **உமது பாடசாலையில் ஊடக தின விழாவினை வெகுவிமரிசையாகக் கொண்டாடத் தீர்மானித்து உள்ளீர்கள் எனக் கருதிக் கொள்க.**

1) பாடசாலையொன்றுக்கு பொதுமக்கள் தொடர்பு தேவைப்படும் சந்தர்ப்பங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (4 புள்ளிகள்)

2) ஊடக தின விழாவில் பொதுமக்கள் தொடர்பு அதிகளவில் அவசியம் பயன்படுத்த வேண்டிய திறன்கள் **இரண்டினை** விபரிக்குக. (08 புள்ளிகள்)

3) பாடசாலையின் ஊடக தின விழாவினைப் பிரசித்தப்படுத்துவதில் ஊடக அதிகாரியினால் மேற்றகொள்ளத்தக்க **மூன்று** செயற்பாடுகள் தொடர்பில் விளக்குக. *(12 புள்ளிகள்)*

4) மேற்குறிப்பிட்ட நிகழ்வினை மேற்கொள்ள நிகழ்வு முகாமையாளர் மேற்கொள்ளும் படிமுறைகள் தொடர்பாக ஆராய்க. *(16 புள்ளிகள்)*

07. **ஆய்வு என்பது புதியனவற்றைக் கண்டறிவதற்கான வழிமுறையாகும்.**

1) ஆய்வாளனால் சேகரிக்கப்படும் தரவுகளின் தன்மைக்கு ஏற்ப **இரண்டு** வகைப்படுத்தலாம். அவை எவை? *(4 புள்ளிகள்)*

2) ஆய்வின் பிரதான வகைகள் **இரண்டினையும்** குறிப்பிட்டு விபரிக்குக. *(8 புள்ளிகள்)*

3) சமூக ஊடகங்களின் தாக்கம் பற்றி ஆய்வொன்றினை மேற்கொள்வதனால் ஏற்படக் கூடிய ஆதாயங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. *(12 புள்ளிகள்)*

4) அ) ஆய்வொன்றினை மேற்கொள்ளும் போது பின்பற்றப்படும் படிமுறையினை ஒழுங்கு முறைப்படுத்தி எழுதுக. *(4 புள்ளிகள்)*

ஆ) ஆய்வாளன் பின்பற்ற வேண்டிய ஆய்வுச் செயற்பாடொன்றில் ஒழுக்க நெறிகள் தொடர்பில் **மூன்று** விடயங்களினை விபரிக்குக. *(12 புள்ளிகள்)*